## நண்பனுக்கு நண்பனே எம் ஞானம்

நினைவிலும் கனவிலும் விழியிலும்

நீ நீந்திக் கொண்டேயிருக்க

நீயின்றிக் காலம் எப்படிக் கரைந்தது?

உன் பேச்சும் வீச்சும் கதையும்

கண் முன்னே நிழலாட

துவண்ட எம் மனதுக்கு ஆறுதல் தேட

எவ்விடம் போவோம்?

நகரும் காலத்திற்குத் தெரியுமா நண்பா

நீயின்றி நாம் படும் அவஸ்தை?

தளராத மனத்துடனே

நாளெல்லாம் திரிந்தவனே

பிரிவின் கொடுமைதனை

நீயுணர்த்திச் சென்றாய்.

சபை கலகலக்க நீ வேண்டும்

சரிக்குச் சமன் இருந்து

கருத்துச் சொல்ல நீ வேண்டும்

கூப்பிட்ட குரலுக்கு ஏதென்று

ஓடி வர நீ வேண்டும்

இத்தனையும் மறந்து

வருடம் போனதே



குறும்புடனே பலதும் செய்தாய்

இரசித்திருந்தோம்

பொல்லாத காலனுடன்

உடன்பட்டதும் விளையாட்டு என்போமா?

மீட்சி கொள்ளா மனது இன்று

தள்ளாடிப் போனதே.

நண்பர்கள்